


**ஒலிப்பேழையில் பாடியவர்:**

திருமுறைக் கலாநிதி, பண்ணிசைத் திலகம்

## சிவத்திரு வைத்தியநாத தேசிகர் ஓதுவார்

**ஒலிப்பேழையில் முன்னுரை:**

## சிவத்திரு கண்ணா கண்ணப்பன்

செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

## திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

(02-01-2012 **க்கும்** 01-01-2014 **க்கும் இடையே பிறந்தவர்கள்** - **N/K1/K2**)
(**பங்கு பெறுவோர் மூன்று பாடல்களையும் பயின்று வரவேண்டும்**)

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**ராகம்** :**நாட்டை** **தாளம்** : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**பிடியதன் உருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடுமவர் இடர்**
**கடி கணபதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.**

**திருச்சிற்றம்பலம்**

### திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

### திருக்குறுந்தொகை

**ராகம்**: **நாதநாமக்கிரியா** **தாளம்** : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்**
**நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்**
**ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ**
**ஓடிப் போம்நம துள்ள வினைகளே.**

**திருச்சிற்றம்பலம்**

### சுந்தரர் அருளிய தேவாரம்

**பண்**: **நட்டராகம்** **தாளம்** : **ரூபகம்**

**திருச்சிற்றம்பலம்**

**பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.**

**திருச்சிற்றம்பலம்**

# பிரிவு R4, R5 & R6

(02-01-2009 க்கும் 01-01-2012 க்கும் இடையே பிறந்தவர்கள் - P1/P2/P3)

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

பண்: குறிஞ்சி | தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர்அருளிய தேவாரம்

பண்: காந்தாரபஞ்சமம் | தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்குவான் நலன்
குலமில ராகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர் அருளிய தேவாரம்

பண்: இந்தளம் | தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே.

திருச்சிற்றம்பலம்

## சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

ராகம்: மத்தியமாவதி | தாளம் :ஆதி

திருச்சிற்றம்பலம்

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்

திருச்சிற்றம்பலம்

# **பிரிவு** R7, R8 & R9

(02-01-2006 **க்கும்** 01-01-2009 **க்கும் இடையே பிறந்தவர்கள்** - P4/P5/P6 )
(**பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்**)

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

**பண்**: **வியாழக்குறிஞ்சி** **தாளம்** : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்**
**உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே**
**கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்**.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்**

**பண் : சீகாமரம்** **தாளம்** :**ரூபகம்**

**திருச்சிற்றம்பலம்**

**சூலப் படையானைச் சூழாக வீழருவிக்**
**கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்**
**பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய**
**ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே .**

**திருச்சிற்றம்பலம்**

**சுந்தரர் அருளிய தேவாரம்**

**பண்** : **புறநீர்மை** **தாளம்** : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்**
**ஆட லுகந்தானை அதிசயம் இதுவென்று**
**நாடிய இன்றமிழால் நாவல வூரன்சொல்**
**பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே**

**திருச்சிற்றம்பலம்**

**மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**ராகம்**: **மோகனம்** **தாளம்** : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R10 & R11

(02-01-2002 **க்கும்** 01-01-2006 **க்கும் இடையே பிறந்தவர்கள்** Sec 1-4)

(**பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்**)

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்** : **கௌசிகம்** **தாளம்** : **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும்ஏதம் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**பண் : காந்தாரம்** **தாளம்** : **ஜம்பை**

திருச்சிற்றம்பலம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி உறிதூக்கி
யுழிதந்தென் உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து
கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே.

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர் அருளிய தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** **தாளம்** : **ஆதி**

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசேகொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப்பாடப் பணியாயே

திருச்சிற்றம்பலம்

**சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு**

**ராகம்: ஆனந்தபைரவி** **தாளம் :ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி**
**எங்கும் குழாம்பெருகி**
**விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி**
**மிகுதிரு வாரூரின்**
**மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்**
**மணஞ்செய் குடிப்பிறந்த**
**பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே**

**திருச்சிற்றம்பலம்**

**நக்கீரதேவ நாயனார் அருளியது**

**ராகம்: சௌராஷ்ட்ரம்** **தாளம் : ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகள் ஆவனவும்**
**அஞ்செழுத்துங் கற்க அணித்தாகும் - நஞ்சவித்த**
**காளத்தி யார்யார்க்குங் காண்டற் கரிதாய்ப்போய்**
**நீளத்தே நின்ற நெறி.**

**திருச்சிற்றம்பலம்**

## பிரிவு R12,R13 & R14

**(02-01-2002 க்கு முன் பிறந்தவர்கள்)**

**(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் "திருமுறை ஓதும் போட்டிக்குரிய பஞ்சபுராணப் பாடல்கள் (2018)" தொகுப்பிலிருந்து பயின்று வரவேண்டும்)**

1. **விரும்பிய ஒரு தேவாரப்பாடல்**
   **(ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)**
2. **விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)**
3. **விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)**
4. **விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)**
5. **விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )**

**திருச்சிற்றம்பலம்**

# திருப்பதிகப் பாராயணம்
## 02.85 கோளறு திருப்பதிகம்

**பண்: பியந்தை காந்தாரம்**

**திருச்சிற்றம்பலம்**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளிசனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.01

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்துஎன் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடேழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 02

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசை தெய்வ மானபலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 03

மதிநுதல் மங்கையோடு வடவால் இருந்து மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 04

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும் விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும் மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 05

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர் மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்துஎன் உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல் கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 06

செப்பிள முலைநன்மங்கை ஒரு பாகமாக விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 07

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்துஎன் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.08

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர் வருகாலம் ஆன பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 09

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.11

**திருச்சிற்றம்பலம்**